உ

கடவுள்துணை.

மானிடக்குறியென்றும்

திரேகக்குறி-புருஷலட்சணமென்றும்

வழங்கிய

# அங்கக்குறிசாஸ்திரம்.

இஃது

ம-௱-௱-ஸ்ரீ சிறுமணவூர்

## முனிசாமிமுதலியாரால்

இயற்றப்பட்டு.

ம-௱-௱-ஸ்ரீ பிடாரித்தாங்கல்

நாராயணசாமிமுதலியார்குமாரர்

## சிதம்பரமுதலியார்

சகல சுதந்தரத்துடன் இன்னூலைப்

பெற்றுக்கொண்டு

தமது-வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்


பதிப்பிக்கப்பட்டது.

1902.

உ

ரிஜிஸ்டர்

# அறிவிப்பு.



இதனால் அச்சியந்திரசாலைத் தலைவர்கட்கும் புத்தக வியாபாரிகட்கும் தெரியப்படுத்துவது யாதெனில் சிறுமணவூர் முனிசாமி முதலியாரால் நூதனமாக இயற்றிய அங்கக்குறி சாஸ்திர மென்னும் இன்னூலை சென்னை புரசை குயப்பேட்டை படவெட்டம்மன் கோவில் வீதி 64-வது நெம்பர் வீட்டிலிருக்கும் வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தலைவர்-ம-ா-ா-ஸ்ரீ பி-நாராயணசாமிமுதலியார் குமாரர் பி-சிதம்பரமுதலியாராகிய யான் சகல சுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு மகா கனம்பொருந்திய கெவன்மெண்டாரது சட்டப்படி ரிஜிஸ்தர் காப்ரயிட்டு செய்திருக்கிறபடியால் என்னுடைய அனுமதியில்லாமல் யாதாமொருவர் அச்சிடுவோர்களாகில் ஷையாரது 1893ஹு 28 வது ஆக்டின் 20-வது பிரிவில் 6-வது விதியின்படி நேரிடும் நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாகவும் பினல்கோர்ட்டா ரவர்கள் கேள்விக்கு ஜவாபுதாரிகளாகவு மிருப்பார்க ளென்று யாவரும் தடையின்றி கவநிப்பீர்க ளாகவும்.

இப்படிக்கு.

☞ பி-நா-சிதம்பரமுதலியார்.

| பாதகாலம். | | |
|---|---|---|
| வாரங்கள். | மணிமுதல். | மணிவரை. |
| ஞா | ௪௰ | ௬ |
| தி | ௭௰ | ௯ |
| செ | ௩ | ௪௰ |
| புத | ௧௨ | ௫௰ |
| வி | ௧௰ | ௩ |
| வெ | ய௰ | ௪௨ |
| சநி | ௯ | ப௰ |

யாத்திரைப்பொருத்தம்.
உத்தியோகப் பொருத்தம்.
ஊர்பொருத்தம்.
இவைபார்க்கும்


# நரசக்கரம்.

1
2
3
4
5

| துளிகைகாலம். | | |
|---|---|---|
| வாரங்கள். | மணிமுதல். | மணிவரை. |
| ஞா | ௩ | ௪௰ |
| தி | ௧௰ | ௩ |
| செ | ௧ | ௧௰ |
| புத | ய௰ | ௧௨ |
| வி | ௯ | ய௰ |
| வெ | ௭௰ | ௯ |
| சநி | ௬ | ௭௰ |

நாம நட்சத்திர எழுத்து

| | |
|---|---|
| சு-சே-சோ-ல | அசுவி |
| லி-லு-லே-லோ | பரணி |
| அ-இ-உ-எ | கார்த் |
| ஒ-வ-வி-வு | உரோ |
| வே-வோ-க-கி | மிருக |
| கு-கட-ய-ச | ஆருத் |
| கே-கோ-ஹ-ஹி | புநர்பூ |
| ஹு-ஹே-ஹோ | பூசம் |
| டி-டு-டெ-டொ | ஆயிலி |
| ம-மி-மு-மே | மகம் |
| மோ-ட-டி-டு | பூரம் |
| டே-டொ-ப-பி | உத்திர |
| பு-ஷ-ண-ட | அஸ்த |
| பெ-பொ-ர-ரி | சித்தி |




நாமநட்சத்திரஎழுத்து

| | |
|---|---|
| ரு-ரே-ரோ-த | சுவாதி |
| தி-து-தே-தோ | விசாக |
| ந-நி-நு-நே | அநு |
| நோ-ய-யி-யு | கேட் |
| யே-யோ-ப-பி | மூலம் |
| பு-த-ப-ட | பூராட |
| பே-போ-ஜ ஜி | உத்தி |
| கி-கு-கெ-கொ | ஸ்ரீரவ |
| க-கி-கு-கெ | அவிட் |
| கோ-ஸ-சீ-சு | சதயம் |
| ஸே-ஸோ-த | பூரட் |
| து-ச-ஜ-ஞ | உத்தி |
| தெ-தொ-ச-சி | இரேவ |

அவரவர்கள் நினைத்த ஊர் அல்லது உத்தியோகம் யிதுகளின்முதலெழுத்து யெந்நட்சத்திரத்தில்வருகிறதோ அந்நட்சத்திரத்தை இந்தமனிதனுடைய சிரசின்மேலிருக்கும் க-வது, நம்பராக பாவித்து யெண்ணிக்கொண்டுவந்தால் தன்னுடைய பேருக்கு முதலெழுத்துவரும் நட்சத்திரமானது மேலேயிருக்கும் (ரு) நம்பருக்குள் வந்தால்நன்று முகத்தில் (௬) கண்ணில் (எ) உதட்டில் (அ) இதுவும்மகாவுத்தமம் புஜம் (உ)ம்மார்பு (உ) உத்தமம் வயறு (ரு)ம்வெகு நன்மைகுய்யம் (க) குதம்கம்-க-காலில் கூ-ல் இதுகளில் வந்தால் அது அலைச்சலும் துன்பமும் பிணியும் வியாகூலமுங்கொடுக்கும் ஆகாது என்பதாம்.

# ராசிச் சக்கரம்.

| | | | |
|---|---|---|---|
| மீனம். 12 | மேஷம். 1 | ரிஷபம். 2 | மிதுனம். 3 |
| கும்பம். 11 | | | கடகம். 4 |
| மகரம். 10 | | | சிங்கம். 5 |
| தனுசு. 9 | விரிச்சிகம். 8 | துலாம். 7 | கன்னி. 6 |

தரையில் வட்டமாகமெழுகி இந்த சக்கரம்போல் விபூதியினால் போட்டு மஞ்சளால் பிள்ளையார் பிடித்துவைத்து நாலுவர்ன புஷ்பஞ் சூட்டி ஒரு மஞ்சள்கிர புஷ்பத்தை சிறுவர்களிடம்கொடுத்து தொடச் சொல்லி அந்தலக்கப்பிரகாரம் சுபாசுபம் தெரிந்துக்கொள்ளவும்.

1 மேஷமாகிய ஆடுதோற்றினால் நினைத்தகாரியம் முடியாது.
2 ரிஷபந்தோன்றினால் அறைபலன் கிடைக்கும்.
3 மிதுனந்தோன்றினால் அறைபலன் கிடைக்கும்.
4 கடகமானால் உன்மனம்போல் நிறைவேறும்.
5 சிங்கமானால் சத்துருக்கள் மேலிட்டிருக்குறார் முடியாது.
6 கன்னியானால் உடனே ஜெயமாகும்.
7 துலாமானால் நாள்பட்டுதான் நிறைவேறும்.
8 விருச்சிகமானால் அந்த விஷயத்தில் கொஞ்சவிஷமிருக்கிறது.
9 தனுசு நீநினைத்த காரியம் நம்பவேண்டாம்.
10 மகரம் கொஞ்சநாள் பட்டு கைகூடும்.
11 கும்பம் அஞ்சவேண்டியதில்லை வெகுசீக்கிரத்தில் முடியும்.
12 மீனம் இந்தகாரியம் வீடுதேடிவரும்.

{ இந்தசக்கரம் தொடச்சொல்லிபார்ப்பவர்களுக்கு தன்னுடையலக்கினமே தனக்கு தோற்றினால் எந்தலக்கினமானாலும் புதையல்கிடைத்தமாதிரி முடியும். }



உ

கடவுள் துணை.



மாநிடக்குறியென்றும்

இரேகக்குறியென்றும் புருஷலட்சணமென்றும்

வழங்குகின்ற

# அங்கக்குறிசாத்திரம்.

விநாயகர் துதி - கலிவிருத்தம்.

நீரும்வெண்மணி நேரும்பரத்தினேர்
கூரிலோங்கும் குமரியருள்சுதன்
வாரணந்திகழ் வதனவள்ளலார்
காரணப்பதம் கைதொழுதேத்துவாம்.



நூன்முகம்.

காரணமாம் கைலாயக் கர்த்தாபோற்றி
ககனமொடு புவனமதை யீன்றாள்போற்றி
பூரணமாம் ஜெகச்சோதி பொருளேபோற்றி
புத்தியிலே நிர்த்தமிடும் சத்திபோற்றி
வாரணமா முகமுடைய வையாபோற்றி
வஞ்சியொடு மஞ்ஞையிலே வருவாய்போற்றி
தாரணியில் மானிடத்தின் குறியைச்சொல்ல
தந்தைபொரு பதினெண்பேர் தாளேபோற்றி. க

போற்றியே மனிதரிட புதுமையெல்லாம்
புத்தியினு லானமட்டும் சேகரித்து
சாற்றுகிறேன் அறிவுடைய மாணுகேளு
சஞ்சலத்தில் வீழாதே மனதாய்நில்லு

காற்றிலே யகப்பட்ட துரும்பைப்போலே
கணகலங்கி மனங்கலங்கி தடுமாறுதே
நேற்றிருந்தா ரின்றைக்கு வெண்ணீரானார்
நீயேது மலைபோலே வேர்கொள்வாயோ. ௨

வேர்கொண்டு யிருப்பவர்கள் யாருமில்லை
விண்ணுடனே மண்கூட வெளியாய்ப்போகும்
பாரகொண்டு ஆண்டமன்னர் கோடாகோடி
பட்டணத்துவேந்தரிலே யார்தானின்றார்
நீர்கொண்டுபடியளக்கும் சிவனும்சத்தி
நேர்கொண்டபெரியோரே நிலைநிற்பார்கள்
கார்கொண்ட சிறுமணவூர் குடியாய்க்கொண்ட
காளைமுனி சாமிசொல்லைக் கைக்கொள்வாயே. ௩

முனிசாமி யென்றக்கால் பெரியோனல்ல
முறைகள்பல சித்துவகைக் கற்றோனல்ல
தனியான சாஸ்திரங்கள் தெரிந்தோனல்ல
தன்னைத்தா னறிந்தமகா சித்தனல்ல
கனிபோலே நாதாக்கள் வைத்தநூலில்
கண்டபல துண்டெடுத்துக் கோர்வையாக்கி
பனிபோலே அவரவர்கள் தெரிந்துக்கொள்ள
பக்குவமா யெழுதிவைத்த பாகம்பாரே. ௪

பாரப்பா மனிதருடல் யெண்ஜாணும்
பண்ணுமயன் தன்னெழுத்தே ரேகையாகும்
நீரப்பா அள்ளியிடும் நெற்றிமேலே
நின்றிருக்கும் மண்டையெழுத் தென்றேசொல்வார்
மாரப்பா மண்டையிலே யெழுத்துப்போட்டு
மயிராலே மறைத்ததாய்ப் புலம்புவார்கள்
ஆரப்பா அவ்வெழுத்தைக் கண்டபேர்கள்
அரகரா யிப்படியும் கெடுவாருண்டோ. ௫

உண்டான அங்கத்தின் குறிகளெல்லாம்
ஒவ்வொன்றாய் சொல்லுகிறேன் வுண்மைகேளு
பண்டான ரிஷிகளப்பா பதினெண்பேர்கள்
பரத்தொளியைக் கண்டவர்கள் பன்னவாக்கு
திண்டாடி யொருவரையுங் கேட்கவேண்டாம்
தெரியாத மானிடர்க்கே திரட்டிவைத்தோம்

கண்டாதி சூட்சமதை யரிந்தபேர்க்கு
கலியுகத்தி லின்னமொரு குருவுமுண்டோ. சு

குருவேண்டா வித்தையிது கூரக்கேளு
குடுமியடா மனிதனுக்கு ஆறுசாணும்
அருமையடா கோடியிலே ஒருவனுக்கு
அரசனிட குறிகளிது யறிந்துகேளு
திரமான கூந்தலபணைப் போல்வளர்ந்து
தேடரிய மேகமபோல் கருத்துநின்றால்
சரியாக நூற்றிருப தாண்டேயாகும்
ஜாண்குறைந்தால் நூறென்று சாற்றலாமே.

(இ-ள்.) மானிடராகப் பிறந்தவர்களுக்கு குடிமியானது ஆறுஜாண் ணிகளமிருக்க வேண்டுமாம் ஆனால் அது அரசர்களிலும் நூற்றிலொருவனுக்கு உண்டு அப்படியிருக்குமானல் நூத்திஇருபது வயதென்றுசொல்லலாம் ஒருஜாண்குறைந்திருக்குமாகில் நூறுவயதென்று சப்தரிஷிமுதலான பதினெட்டுசித்தரும் சொல்லினர்—எ-று. எ

ஆமடா முனைவெடித்துக் சோறையாகி
அப்போதைக் கப்போதே சிக்குமாகில்
நாமடா யென்சொல்வோம் சுகமேயில்லை
நாடோடி மாடதுபோல் நடக்கையுள்ளான்
காமடா சுருள்பட்டு மொத்தமாயும்
கார்கிரத்தான் காமிவெகு காமியாகும்
போமடா மிருதுவாகத் துவளுமாகில்
புத்தியிலே மிக்கவனாய் புகலலாமே.

(இ-ள்.) குடுமியானது சற்றேரக்குறைய நிகளமாயிருந்த போதிலும் முனைவெடித்தும் செம்பட்டைகிரம்பட்டும் சுருணைசுருணையாய் முருக்கு பட்டிருக்குமாகில் ஒரு ஜீவனத்திலும் நிலைப்படமாட்டான் அதிகக் கருப்புகிரமாயும் சுருட்டை வடிவமாயும் யிருக்குமாகில் முறையில்லாத புணர்ச்சிசெய்வான் அதாவது அதிகாமியாயிருப்பான்—எ-று.

புத்தியுண்டாம் காதகண்டு நீண்டிருந்தால்
பொருளுள்ள புருடனடா சுகவானுவான்
நெற்றியது நாலுவிரற் கடையேயானல்
நெடுந்தூரம் யாத்திரைகொள் யோகியாவான்

சற்றேரக் குறைவாக யிருக்குமாகில்
சமுசாரந் தனிலிருந்தே ஞானியாவான்
மற்றவன்றன் நெற்றியிலே வறைநாலீற்று
வழகுபெரு முன்கழுத்தில் வரைமூன்றாகில்.

(இ-ள்.) யாதொரு மனிதனுக்கும் செவிகளானது அகண்டு நீண்டும் இருக்குமாகில் தளராத்திரவியம் பெற்றவனாயிருப்பான் நெத்தியான து தன்கையானாலும் விரற்கடை அகலமிருக்குமாகில்ஜீவநதிகள் முத லான கங்காதீர்த்தமாடுவான் தூரஸ்தலங்களுக்கு யாத்திரை செயவா ன் வேதாந்த கேழ்விகளிலும் சிரந்த போகியாவான் அப்படிநாலுவிர ற்கடையல்லாது சற்றேயேரக்குறையா யிருக்குமாகில் இல்லறமாகியச ம்சாரத்திலிருந்தே ஞானத்திலும் வகாரம் முதலான போக்குகளில் பி ரிய முள்ளவனாயிருப்பான்—எ-று. கூ

ஆகவே யிவ்விரண்டு குறியோனுக்கு
அப்பனே சொன்னவிந்த ரேகையென்பார்
ஆகவே நாற்பத்தி யைந்துக்குள்ளே
அவனல்லவோ தாரமது ரெண்டுகொள்வான்
நோகவே சோரூட்டி வளர்த்ததந்தை
நோய்கொள்வான் நாற்பதிலே அடையாளங்கள்
சாகவே மாட்டான்நீ பயப்படாதே
சார்பாக யின்னமொரு குறியுங்கேளு.

(இ-ள்.) மேல்பாடடில் கூறியபடி நெற்றியிலே நாலுவரையாய் கீற் றும் முன்கழுத்தில் மூன்றுகீற்று விழுந்து மடிப்பாகத் தோற்றுமா கில் அதை சொர்ன்னவிந்துரேகையென்று சொல்லுவார்கள் அந்தஅ டையாளமுள்ளவன் நாற்பத்தியைந்து வயதுக்குள் இரண்டுதாரங் ட் டுவான் அவ்விதக்குறி பெற்றவனுக்கு நாற்பதாவது வயதிலே அவனு டைய தகப்பன் பிரமாதவியாதிக்குள்ளாவான் ஆகிலும் சாகமாட்டா ன் இன்னம் ஒருவிதக்குறி சொல்லுகிறேன்—எ-று. ம

கேளடா நெற்றியிலே வறைமூன்றாகில்
மகடியான வுட்கழுத்தில் வறைரெண்டாகில்
தோளடா முதுகுவலப் புரத்திலப்பா
தொந்தமுள்ள மருவொன்று தோற்றுமாகில்
ஆளடா வொருதாரம் வீணாய்ப்போகும்
அப்பனே மறுதாரம் நிலைக்கும்பாரு

மீளட்டாமூன்றிருப தருபதுக்குள்
மேதினியி லிக்குறியோன் மீளானெண்ணே.

(இ-ள்.) அவ்விதக்குறிதவழி நெற்றியிலே மூன்றுவரையும் உட்கழுத்தில் இரண்டுவரையும் இருக்குமாகில் இரண்டுதாரத்துடன் கெடுகாலத்திருப்பான் தோளாகிய வல்துபுஜத்துக் கடிமுதுகில் கடுகுபோல ஒருமருவு யிருக்குமாகில் அவனுக்கு ஒருதாரம் இறந்துபோகும் அப்படி இறந்துபோன யிந்தஅடையாளமுள்ளவன் அறுபது வயதில் காலமரணமடைவான்—எ-று. யக

என்னவேநெற்றியிலே கீற்றிரண்டு
யிடதுபக்கம் நெற்றியிலே மங்குதோற்றில்
கண்ணெனவே மக்களொடு மனைவியானோர்
கலந்திருப்பார் மாபெரிய குடும்பமாகி
மண்ணென்ற பூமியிலே பொருளுந்தோற்றும்
மண்டலத்து வேந்தனும் பிரியனுவான்
பண்ணென்ற விக்குறிகள் பொய்யாதப்பா
பாண்டவர்கள் முன்பாட்டன் வியாசன்வாக்கே.

(இ-ள்.) நெற்றியிலே இரண்டுவரையும் இடதுபக்கம் நெற்றியிலே மங்கு போல ஒரு அடையாளமிருக்குமாகில் பெண்சாதி பிள்ளை பக்துக்கள் முதலானவருடன் பெரியகுடும்பமாக யிருப்பான் பூமியில்சில புதையலுமெடுப்பான் அதிகாரமான வுத்தியோகஞ் செய்வான் இது பாண்டவர்கள் பாட்டனுகிய வியாசபகவான் சொன்னபடி பொய்யாது —எ-று. கஉ

முன்னென்ற நெற்றியிலே வரையைந்தாகில்
மக்களது தக்காது பொருளுஞ்சேதம்
பின்னென்ற புரங்கழுத்தில் மடிப்புமூன்றில்
பெரியதன வானுவான் பொய்யேசொல்வான்
கன்னமது சிரிக்கையிலே மடியுமாகில்
காமியடா பெண்ணாலே மடிவான்மட்டை
யென்னுணை யிந்தமொழி வெளியிடாதே
யிணங்காத மடையருக்கு குறிசொல்லாதே.

(இ-ள்.) நெற்றியினிடமாக ஐந்துவரை யிருக்குமாகில் அவனுக்குப்பிறந்த சந்ததிகள் யாதொன்றும் தக்காதாம் புரங்கழுத்தில் மூன்று மடிப்புதோற்றுமாகில் பெருத்த பணக்காரனுவான ஆனல் பொய்சத்தியமுதலான அபாண்டங்களுக்கு அஞ்சமாட்டான் சிரிக்கும் பொழு

து கன்னமானது கத்திவெட்டுபோல் மடியுமாகில் அதிககாமியாயிருப்பான் காமத்தாலேமடிவான் இந்தக்குறியை வெளிவிடாதே—எ-று.

மங்கொன்று மால்போலே வலதுபக்கம்
மறுவாகி லுங்கழுத்தி லிருக்குமாகில்
தொங்கவே மிளகுபோ லிருந்திட்டாலும்
தோற்றுகிற யோகமதைச் சொல்லக்கேளு
கெங்கையிலே முப்பத்தி யாமாண்டுக்குள்
கெண்டமது வந்துடனே மீள்வானப்பா
இக்கிதனைப் பொய்யென்று சொன்னமட்டி
யோராதபடுகுழிக்கி யாளாவானே.

(இ-ள்.) வலது பக்கம் கழுத்தில் யேதாகிலுமொரு அடையாளம் போல மங்காகிலும் மருவாகிலும் இருக்குமாகில் மிளகுபோல் வருண்டைவடிவமாக வளர்ந்து தொங்கினாலும் அவனுக்கு முப்பத்தியாராவது வயதில் கெங்கையிலே ஒரு கெண்டம் வந்துமீளுவான் இதை பொய்யென்று சொன்னவன் நாகத்துக்காளாவான்—எ-று. சச

ஆளடா மனிதனிட நெற்றிமேலே
அப்பனே மூன்றுவரை தெளிவாய்ப்பட்டு
தோளான மார்புநேர் கழுத்தின்மேலே
தொந்தமுள்ள பெரியவரை தோற்றுமாகில்
மீளுவான் ஐந்தான வயதுக்குள்ளே
மேலிட்டகங்கையிலே கண்டம்பட்டு
வேளாவான் பின்னேயொரு தோஷமில்லை
வெகுபணத்துக் குள்ளவனாய் மீளுவானே.

(இ-ள்.) ஒருமனிதனுடைய நெற்றியின்மேல் மூன்றுவரையும் உட்கழுத்தில் ஒரே மடிப்பாக பெரியவரைதோற்றுமாகில் அவனுக்குஐந்தாவது வயதில் கெங்கையிலே ஒரு கெண்டம் வந்து மீளுவான் பிறகு ஒருதோஷம் கிடையாது—எ-று. சரு

மீண்டவன்றன் யோகமிது யின்னமுண்டு
மேல்பார்வை கொள்ளாதே கேளுசேளு
ஆண்டனென்ற வயதுமுப்ப தர்குமுன்னே
ஐந்துபிள்ளைப் பெருவான்கா ணுண்மூன்றுகும்
தாண்டியே நடைநடைப்பான் தீரக்காரன்
தனலாபம் கொஞ்சமடா தரித்ரகல்ல
வேண்டியதை யனுப்பிவைப்பான் குறைவிராது
விண்ணரிய சத்தியமாய் விளம்புவேனே.

(இ-ள்.) முன்பாட்டிலுரைத்த யோககாரனுக்கு முப்பது வயதுக்குள் ஐந்துபிள்ளையுண்டாகும் அதில் பெண்ணிரண்டு ஆண் மூன்றாகும் அவனுடைய அடையாளம் எனனவென்றால் தாண்டுகாலாய் நடப்பான் அதிகபணக்காரனுமல்ல தரித்திரனுமல்ல வேண்டிய சுகமெல்லாம் அனுபவிப்பான்—எ-று. ௧௬

விளம்பலே அடியிதழ்தான் பெருத்துநீண்டு
விதமாகத் தலைபெருத்து யிடதுபக்கம்
குளம்பவே மங்கொன்று தோற்றிக்கொஞ்சம்
குட்டையாள் கருத்தவனாய் குழிக்கண்ணாகில்
தளம்பவே கடனழுந்தி முப்பதாண்டில்
தன்மனைவி பரிகொடுத்து தனியோனாவான்
குளம்பவே யிக்குறிக ளுள்ளோனுக்கு
குழந்தையது பெண்ணொன்று மென்றுசொல்லே.

(இ-ள்.) அடியிதழ்பெருந்தும் நீண்டும் தலைபெருத்தும் இடதுபக்கம்தோளில் மங்கு ஒன்றுயிருக்குமாகில் குழிக்கண்ணாக யிருந்தாலும் குட்டையாளாகவும் கருத்தவனாகயிருக்கும் இந்தக்குறியெல்லாமுள்ளவன் முப்பதுவயதுக்குள் சாத்தியப்படாத கடன்காரனாகி யிருப்பான் அவனுக்கு வொரே பெண்குழந்தையிருக்கும் பெண்சாதி யிறந்துவிடுவாள்—எ-று. ௧௭

பெணணென்று கூறினபின் யின்னங்கேளு
பிடரியிட பக்கமொரு மறுவுகண்டால்
கண்ணணைசே பூப்பட்டபிள்ளையொன்று
கதிர்போலே மாணிறமாய் வளர்வானப்பா
அண்ணலே யிக்குறிக ளநேகமுண்டு
யாரறியப் போறார்க ளவனிமீது
விண்ணிலே மீனமதை யெண்ணினாலும்
வினையுடலாம் மனிதர்குறி வேணதுண்டே.

(இ-ள்.) பிடரியிலேயிடதுபக்கம் ஒருமருவுவுள்ளவனுக்கு கண்ணில் பூப்பட்ட பிள்ளையொன்று பிறக்கும் அதுமாணிறமாய் இருக்கும் ஆகாயத்திலே யிருக்கிற நக்ஷத்திரத்தை எண்ணினாலும் யெண்ணலாமல்லாது வினைக்காரணமாய் பிறந்த இந்தமானிடர்கள் குறியைச்சொல்ல ஆராலும் முடியும்—எ-று. ௧௮

மனிதனவ னெற்றிவறை யைந்தேயாகில்
மாளாமல் நூறாண்டு சரியாயிருப்பான்

இனிதான நான்குவரை தோற்றுமாகில்
வெண்பதே வயதென்று யிமையோர்சொல்வார்
துணிவாக மூன்றுவரை காணுமாகில்
தொல்லுலகில் வயதறுப தென்றேசொல்லு
அணியாக கீற்றிரண்டே தோற்றுமானால்
அவனியிலே நாற்பதென்று வுரையலாமே.

(இ-ள்) யாதொருமனிதனுக்கும் நெற்றியிலே ஐந்துவரை யிருக்குமாகில் ௱ வயது சரியாயிருப்பான் நாலுவரையிருக்குமாகில் ௮௰ வயதுயிருப்பான் மூன்றுவரை யிருக்குமாகில் ௬௰ வயது யிருப்பான் இரண்டு கீற்றே தோற்றுமாகில் ௪௰ வயது இருப்பானென்று சொல்லலாம்—எ-று. ௧௧

வரையொன்றுங் காணமல் சந்திரன்போல
வளமாக நெற்றியது காந்திவீசி
கயர்போல சிலநரம்பு மேலேதூக்கி
கண்மணியே சாரைப்போல் நீண்டிருந்தால்
தரையாளும் இராஜனுக்கு மந்த்ரியாவான்
தலைசிறுத்து கண்குவிழ்ந்தால் தரித்ரனுவான்
கரைபோல புருவமது அகண்டிருந்தால்
கன்னியர்கள் மோகித்துக் கைகொள்வாரே.

(இ-ள்.) நெற்றியினிடமாக யாதொரு கீற்றுமடிப்பு ஒன்றுமில்லாமல் எட்டாம்பிறைச் சந்திரன்போல்காந்திவீசி யெவ்வர்ணமாயிருப்பதன்றி [illegible]நரம்புகள் தூக்கி சாரைப்பாம்புபோல் ஓடியிருந்தால் அவ[illegible]ரிதியோகம் கிடைக்கும் அல்லது அதிகாரம்பொருந்திய பெரிய உ[illegible]யாக முள்ளவனாய் செங்கோல்செலுத்துவான் அந்த அடையாள[illegible]வனுக்கே தலைபெருத்து அழகில்லாமலும் உள்ளடங்கிபகுதி[illegible]னுமா யிருப்பானாகில் மீளா தரித்திரனுவான் அப்படியா யானாலும் புருவமானது வர்ணம் தீட்டியதுபோல் கருத்து பட்டையாக அகன்[illegible]ருக்குமாகில் ஸ்ரீகள் மோகித்து அவனுக்கு இலவசமாகமோகத்தைக்கொடுத்து கைக்கொள்வார்களாம்—எ-று. ௨௰

கைக்கொள்வார் இருகண்ணும் அலரிபோலே
கடைக்கண்ணும் சிவந்திருந்தால் தனவானுவான்
மைப்பட்டு துடைத்தாப்போல் மாசிகண்ணன்
மாபெரிய வினைசெய்வான் மடையனப்பா

செப்பரிய மலர்மறுவாம் புள்ளிக்கண்ணன்
 செந்தமிழால் சிலதுகவி செய்வானப்பா
கைப்பட்ட தாமரைப்போல் பூர்த்தகண்ணன்
 கணக்கில்லா பொன்படைத்து சீமானுவான்.

(இ-ள்.) யாதொருவனுக்கு அலரிப்பூப்போலே கண்கள்பிரகாசித்தும் கடைக்கண் சிவந்திருந்தால் சுகதிரவியமுள்ளவனுய் சுகித்திருப்பான் மாசியாகிய மேகத்தைப்போன்ற அழுக்குக்கண்ணன் மூர்க்ககுணமுள்ளவனும் சரித்திரனுமாயிருப்பான் மலரிலுள்ள அறும்பைப்போல சிறுமுழிகளுள்ளவன் அல்லது குறிதிறமுள்ள கண்ணன் செந்தமிழாகிலும் சுயபாஷையில் சிலகவித்துவம் செய்வானும் கையினுல் இதழ்களை பிரிக்கப்பட்ட தாமரைபோல மலர்ந்து பிரகாசிக்கும்பெரியகண்களையுடையவன் கணக்கில்லாத திரவியம்படைத்து சீமானுயிருப்பான்—எ-று. உக

ஆக்வே தாடையிலே சுழியொன்றுகில்
 அப்பனே ருஜனிட யோகமாகும்
ஆகவேதாடையிலே சுழிரெண்டாகில்
 அதிகாரத் தொழில்பெருவா னடங்கமாட்டான்
ஆகவே தாடையிலே சுழிமூன்ருகில்
 அவனுடைய வயதப்பா னுன்காம்பத்தில்
ஆகவே யோகமிலே பெருவானென்று
 அவனியிலே வியாசமுனி சொன்னதாமே.

(இ-ள்) மனிதனதுதாடையிலே ஒருசுழியிருக்குமாகில் இராஜயோகம்பெற்று சுகமாக வாழ்ந்திருப்பான இரண்டுசுழியிருக்குமாகில் சூரத்தொழிலாகிய அதிகாரம் செலுத்துவான் மூன்றுசுழி யிருக்குமாகில் அவனுக்கு நாற்பதுவயதில் அகஸ்மாத்தாய் ஒருயோகம் கிடைக்குமென்று வியாசமுனிசொன்னுர்—எ-று. உ௨

சொன்னதொரு வலதுபுஜம் மீதிலேதான்
 சுழியொன்று யிருந்தாக்கால் யோகங்கேளு
பன்னதொரு தனவானுய் வாழ்வானப்பா
 பாவியடா யிடதுபுஜம் மேலேயானுல்
தனனுதொரு வலதுபக்கம் சிரசுதொட்டு
 தரைதாங்கும் பாதமட்டும் அரிவாய்பாறு
மன்னதொரு வலம்புரியாய் சுழிகண்டாக்கால்
 மண்ணுலகி லுள்ளளவும் சுகமாய்வாழ்வான்.

பல்வரிசை முத்போது லழகுதோன்றில்
 புசியாமல்ஜீவிப்பான் குறைவிராது
சொல்லியவன் சிரிக்கையிலே மூதேவிப்போல்
 சுளித்தமுக மானக்கால் தரித்திரனாவான்
வில்லார்ந்த அரசனைப்போல் சிரிக்கப்பெற்றோன்
 வெகுபணத்தைக் கொண்டுவியா பாரம்செய்வான்
அல்லாத அழுங்ககைக்யுள்ளானப்பா
 அடுத்தயிடங் கூடத்தா னழியும்பாரே.

(இ-ள்) பல்வரிசையானது முத்தைப்போல் பிரகாசிக்க சிரிக்கிறவன்குறைவில்லாத ஜீவனமும் அடுத்தவரை ஆதரிக்கும் சக்தியுள்ளவனுயுமிருப்பான் ஒருவன்சிரிக்கும்போது மூதேவிபோல் அழகில்லாமல் சுளித்தமுகமாயிருக்குமானால் தரித்திரமே யனுபவிப்பான் அல்லது இராசாக்களைப்போல் இருமாப்பானசிரிப்புசிரிக்கிறவன் வெகுபணமுள்ளவனும் பத்துபேருக்கு தலைவனாக பெரியவியாபாரம் செய்யத்தக்கவனுயிருப்பான ஒருவன் சிரிக்கும்போது அழுகிற முகத்தைப்போலிருக்குமானால் அவனை அடுத்தயிடங்கூட தரித்திரம்மேலிட்டு தாழ்வடையும—எ-று. ௨௮

# இனிகெருடக்கயர்

சாஸ்திரம்.

ைகவிரலா ஐமந்தினையுங் கயற்றினாலே
 கலக்களந்துஓர் நீளமாகக்கண்டு
செய்யவே முழங்கையைத் தொட்டுமைந்தர்
 சீராக நடுவிரலை யொட்டிப்பாரு
ஐவிரலுந் தாண்டியது மிச்சமானால்
 அவனுடைய யோகமதை அறையக்கேளு
வையமிசை நூறுண்டு குறைவில்லாமல்
 வாழ்குலான சிவிகையுடன் வாழ்வானப்பா.

(இ-ள்.) வலதுகையின் ஐந்துவிரல்களையும் ஒரு கயற்றினால் அளந்து அந்தகயற்றை முழங்கையிலிருந்து நடுவிரலுக்குபார்க்கையில் அந்த கயரானது ஐந்துவிரலும் தாண்டி மிச்சப்படுமாகில் அவன்சரியாய் நூறுவயது வரையிலும் பல்லக்கு முதலான வாகனங்களோடு மிகவும் பிரகாசியாதியாய் வாழ்ந்திருப்பான் அப்படி யல்லது நடுவிரலுக்கு

சமமாயும் அல்லது ஒருவரை குறைவாகயிருந்தபோதிலுஞ் சகலபந்துக்களுடன் கூடியசுகத்தோடு ஜீவியிருப்பான்—எ-று. ௨௬

முன்னளந்த படிகயற்றை யளந்துபார்க்கில்
முழங்கையி லிருந்துமணிக் கட்டுமட்டும்
தன்னையொட்டி யங்கையிலே நிற்குமாகில்
தரணிமிசை யனைவருக்கும் யேழையாவான்
பன்னவொரு துணையின்றி யொருவனாகி
பலவீடு மிரந்துண்ணும் பசியோனாவான்
பின்னமிலை யிக்குறிகள் பொய்யாதப்பா
பின்புராணிச் சொல்லாத முனிநூலாமே.

(இ-ள்.) முன்னளந்த மாதிரியாகவே கயற்றையளந்துபாற்கில் மணிக்கட்டுவரையில் வந்தாலும் உள்ளங்கையில் வந்தாலும் அவனுடைய மனைவிமக்கள் யாவுந்தோற்று ஒருதுணையு மிலலாமல் பிச்சை யெடுத்து ஜீவனஞ்செய்வான்—எ-று. ௩௰

மாலைபோல் ஒருகயற்றை கழுத்திலிட்டு
மாரிரண்டின் முலைக்காம்புக் களந்துக்கொண்டு
சாலவே அவன்சிரசில் சுற்றிப்பார்க்க
சரியாக நின்றக்கால் தனியோனாவான்
நூலதுவும் மிச்சமா யிருக்குமாகில்
நேரிழையாள் பிரியகடா நெரிங்கிவாழ்வான்
ஞாலமதி லொருநாளும் பிரியமாட்டான்
நம்பியே முனிவாக்கை நாட்டிற்சொல்லே.

(இ-ள்.) ஒரு கயற்றைபெடுத்து மாலைபோல் கழுத்தில்போட்டுஇரண்டு மார்முனைக்கும் அளந்து அந்தக்கயற்றை நடுநெற்றிக்கு நேராய் காதை நீக்கலாக தலையைச்சுற்றி யளந்து பார்த்தால் சரியாயிருக்குமானல் சம்சாரத்தில் பிரியமில்லாதவன் சிலகாலம் கலந்திருந்தாலும்சில காலம் பெண்சாதியை நீங்கிருப்பான் அந்தக்கயரானது தலையைச்சுற்றியும் மிச்சப்படுமோனல் ஸ்ரீகளுக்கு மெத்தப்பிரியனயிருப்பான் இவ்வன்மீது ஸ்ரீயும்பிரியமாயிருப்பாள் ஒருநாளுந் தனியாயிருக்கமாட்டான் இது பொய்யாகமாட்டாது சகலருக்கும் முனிவாக்கென்று சொல்லுவாய்—எ-று. ௩௧

இன்னமொரு கயரளவு சொல்லக்கேளு
யிதமாக ஐந்துவிரல் வளையம்போலே

[illegible]

[illegible]

(இ-ள்.) [illegible] வலது தோளும் [illegible] புகுதக் [illegible] வத்தால் [illegible] மூக்கு அளவுக்குவ [illegible] த்தில் பிரியமுள் [illegible] க்குமாத்திரம் [illegible]

[illegible]

வயறுமுதல் மார்பளவும் ரோமமுற்று
வனிதயர்போ லிருந்தாக்கால் வஞ்சனுவான்
வயற்றிலே வலம்புரியாய் சுழிகண்டாக்கால்
வாழ்னுளெல் லாம்சுகமாய் வாழ்வான்றுனே.

(இ-ள்.) வயற்றினிடமாக வலதுபக்கம் மச்சமிருக்குமாகில் மிகசாமார்த்தியமுள்ளவனும் சுயபாஷையில் கவித்துவம் செய்பவனுமாயிருப்பான் வயர்முதல்மார்வரையும் புல்முளைத்ததுபோல்செகுட்சியாகரோமங்கள் வளர்ந்திருக்குமாகில் மிகவும் மானியாகயிருப்பான் அதாவது யோக்கியமென்பதாம் மார்முதலானவிடங்களில்ரோமமேயில்லாமல் ஸ்ரீகளைப்போலிருக்குமாகில் வஞ்சகனும் கபடனும் சூதுக்காரனும் போக்கிரியுமாயிருப்பான் வயற்றினிடமாக வலதுபக்கம் வலம்புரிசுழி யிருக்குமாகில் அவனது வாழ்நாளாகிய ஆயிசுபரியந்தம் சுகமுடையவனும் பண்க்காரனும் அதிகாரம்பெற்றவனுமா யிருப்பான். ()

சுகமென்ற மனைவியொடு புணரும்போது
சூட்சமது தானறியுங் குறியைக்கேளு
அகமென்ற வீரியந்தான் சீக்கிரத்தில்
ஆரணங்கு தனக்ககன்றல்செல்வமுண்டாம்
பகடுபட்டுச் கின்னேரஞ் செல்லுமாகில்
பனிப்போலே துக்கமது வந்துமாறும்
இகமதிலே பொதுமடந்தை யானபோதும்
யிக்குறிகள் தப்பாது யிணங்கிப்பாரே.

(இ-ள்.) யாதொரு ஸ்திரீயைப்புணரும்போது வீரியானது அம்மாதுக்கு சிக்கிரம் கலிதமாகும் பட்சத்தில் ஆடவனுக்கு செல்வம் பெருகுஞ் சற்றுநேரப்படுமாகில் கொஞ்சம் துக்கமுள்ளவனு யிருப்பான்.

குறியென்ற வீரியந்தான் மல்லிகைப்போல்
குணமாக மணங்கொடுக்கில் தனவானுவான
வறியென்ற சுண்ணும்பு நாற்றமாகில்
வையமிசை செல்வமது வளராதப்பா
தறியென்ற தேன்போலே வாசம்வீசில்
தையலர்கள் பிரியன்வெகு சுகவானுவான்
பரியென்ற முனிவாக்கு பலவாரேது
டரிட்சிக்கத் தெரியுமடா பாரின்மீதே.

(இ-ள்.) வீரியம்வுதிக்கும்போது மல்லிகைப்பூவாசம் வீசினுல்சகல அயிஸ்வரியமுண்டாகி ஆண்பிள்ளைபெருவான் சுண்ணும்புநாற்றம் வீ

சினுல் தரித்திரமாகுந் தேன்வாசனைவீசினுல் மிகவுஞ்சவுக்கியமாயிரு ப்பானென்று மூனிநூலின் வுண்மைபரிட்சித்தவனன்றி மற்றவனுக்கு பலகால்கூறியும் பயன்படா—எ-று. ௩அ

பாரென்ற வுலகத்தில் புருடர்க்கெல்லாம்
பகரக்கேள் சிறுநீர்தான் பெய்யும்போது
நீரென்ற வந்நீர்தான் வலமாயோடி
நீண்டமுப் புரிகயர்போல் சுழலுமாகில்
காரென்ற மேகம்போல் பணம்பெருத்து
கதித்தசமு சாரியதாய்க் காணவாழ்வான்
தீரென்ற யிடப்புறமா யோடுமாகில்
தரித்திரமே ருடிகொள்ளும் தனம்நிற்காது
நீரென்ற ஜெலமலமும் ஒன்ருய்வந்தால்
நிலமீது வியாதிநெடு நாள்நீங்காது.

(இ-ள்.) ஒவ்வொருபுருஷருஞ் சிறுநீர்விடும்போது அன்னீரானது தன்வலப்புறமாகஓடி வலம்புரியாகவே சுழன்று முருக்காய் விழுந்தால்வெகுநன்மையுஞ் சுகபோகசவுக்கியமுஞ் செல்வமுங் குறையின்றியிருக்குமாகில் இடதுபுஜமாயோடில் தாழ்ந்த சவுக்கியமுந் தரித்திரமுமாயிருக்குமாம் ஜெலமும் மலமும் முன்பின் அல்லாது வொன்ருய் உதித்தால் வியாதியஸ்தராகவே நெடுநாள் துன்பத்துக் கிடமாகவே யிருப்பார்—எ-று. ௩கூ

நீங்காத விரலெல்லாம் நெருங்கிப்பாதம்
நீண்டுவெகு அகலமதாய் பெருத்திருந்தால்
தாங்குகின்ற பாதமது செந்தாமைப்போல்
தளதளப்பாய் மிகசிவந்து தழைத்துநின்ருல்
நீங்காத பொருள்படைத்த புருஷனுவான்
நடைக்குரிகி யடிக்குரிகி விரலுங்குன்றி
தேங்கியே விரல்முனைக ளைந்துமட்டுந்
தெரியாமல்மற்றதெல்லாந் தியைபோல்நின்ருல்
ஓங்கியே பொருளவற்கு நிற்காதையா
ஒன்றுசுக மொன்றுதுய ருரவாங்காணே.

(இ-ள்.) பாதத்தின் விரல்களானதுஒன்ருேடொன்று ஒத்துமையாகநெருங்கியும் விரல் நீட்டமாயும் பாதம்அகண்டும் நீண்டும் உள்ளங்காலானது மிகவுஞ்சிவந்து மெதுவாயிருக்குமாகில் திரண்டசெல்வமுடையவனுயிருப்பான் விரல்கள் குட்டையாயும் உள்ளங்கால் படியா

மலும் அதிகாரம்படைக் [illegible] பாவ [illegible] ல்கருநீரம்ஓடியிருக் [illegible] [illegible] பெற்றவனுயுமிருப்பான்—எ-று. [illegible]

உாவான அங்க [illegible]
[illegible]
[illegible]
அல்லாத மூடரெல்லாம் அலைந்தேமாள்வார்
பரமான ஞன்முகஞர் செய்தகூத்து
பாரிடத்தார் சூதென்று பழிக்கவேண்டாம்
[illegible]
தெய்வமென் றேயுலகில் தெரிசிப்பாரே.

(இ-ள்) அகத்திளிடையுள்ள [illegible] சூ [illegible] (பெரியோர் [illegible]) பக்ஷாக்கா [illegible] இ [illegible] இக்காலத்தினது [illegible] தருரிகளின் லட்சணங்களை [illegible] உரைப்பாரவின் [illegible] தெய்வமென்று தெரிசிப்பர்களா—எ-று. [illegible]

# தேங்காய்சகுனம்.

{ஏதாகிலும் [illegible] ஆலயத்தில் [illegible] [illegible] }

முடிசிறுத்து வட்டமிட்டால் திருவக்கெய்தும்
[illegible]
[illegible]
[illegible]

அடியதனல் பொடிசரித்தால் ரத்னஞ்சேரும்
அடிதுடங்க விரண்டுசெமன் கண்டபூசை
அடியவர்கள் பிடாறுக்கும் ஆனார்ஜயங்கள்
ஐங்கானர் முன்தேங்காய் சகுனம்பாரே.

(இ-ள்) கணபதிக்கு முன்பாக தேங்காயுடைக்கும்போது அடிசிறுத்தவட்டவடிவமாக வுடைந்தால் லட்சுமிகடாக்ஷத்தால் பொன்வந்து சேரும் மூன்றில் ஒருபங்கு வுடைந்தால் வினைத்தகாரியத்திற்கு அச்சம் சொல்லும் அதாவது தோஷமா மென்பது இத்தில் ஒருபங்கு வுடைந்தால் தலையாதசெல்வம்பலிக்கும் ஆறுதுண்டாயுடையுமாகில் நிதானமானவாழ்வாம் அடிக்கும்போது பல்லுபோல் சில பொடிகள் தெரித்துவிடுமாகில் நவலோகத்தைச்சேர்ந்த ஆபரணம் சித்திக்கும் நிறைநிறுத்ததுபோல் இரண்டு துண்டும் சமமாய் உடையுமாகில் மனத்தில் நினைத்தகாரியம் உடனேகைகூடும் மற்றகலையெல்லாம் நிவர்த்தியாகும் அவ்விதம் கணேசருக்குமுன்பாக சகுனம்பார்—எ-று. சஉ

ஆணிமுடி தானிரண்டு கூடதானல்
அக்கினியால் பொருளுக்கு சேதமாகும்
பேணியதில் வோடுடனே தெரிந்துவீழ்ந்தால்
பிணியாலே துன்பபடா பொருளுஞ்சேதம்
நீணியதோர் கண்தெரித்தால் மரணமாகும்
நீளமதாய் பிளந்துவிட்டால் நிலைவிட்டோட்டும்
தாணுவிலே தவரிவிட்டால் குடும்பநாசம்
தந்திமுகன முனைதேங்காய் சகுனந்தானே.

(இ-ள்.) தேங்காயினது குடுமியாகிய முடியானது இரண்டு பங்காய் பிளந்துவிட்டால் அக்கினியால் பொருள் சேதமாகும் வோட்டோடு தெரித்து விழுந்தால் வியாதியினால் துன்பப்படுவதன்றி பொருள் நஷ்டமாகும் கண்கள்மாத்திரம் தெரித்து அப்புறம்வீழ்ந்துவிடுமாகில் மரணம்வரும் பேர்பாதியாக நீளவடிவில் பிளந்து விட்டால் தன்னிருப்பிடம் விட்டு நீக்கிவிடும் அல்லது தேசாந்திரம் போக்கும் அடிபடாமலே தவறியோடிப்போகுமானால் குடும்பநாசமாம்—எ-று. சங

தேங்காயின் சகுனமிது யிவ்வாறாகும்
தேடியிதைக் கண்டறினல் வெளிப்படாச்சு
பாங்கான யிச்சகுனந் தெரிந்தபேர்கள்
பாடிவைத்த துபகார மென்றேசொல்வார்

போங்காலத் தாலழியும் மூடரப்பா
பொய்யென்னும் புரட்டென்றும் புலம்புவார்கள்
நீங்காம லொருநெறியே பிடித்தபேற்கு
நெஞ்சமே சாட்சியது நிஜமாம்பாரே.

(இ-ள். இந்தத் தேங்காய் சகுணமானது கணிதசாஸ்திரத்தின்மூலி யமாய் தேடிக்கிடைத்தமையால் இவ்வளவு சுலபநடையில் வெளியறங்கமாயிற்று அச்சகுணம் தெரிந்துள்ள பெரியோர்க ளெல்லாம் ஒப்புக்கொள்வாரன்றி தள்ளமாட்டார்களாம் என்போல் அறிவற்ற மூடரெல்லாம் பொய்யென்றும் புரட்டென்றும் கட்டுக்கதையென்றும் தட்டுகெட்டு தலைநாளை சீக்கிரந்தேடுவார்களாம் (எப்பொருள் யார்யார்வாய்க்கேழ்ப்பினும் அப்பொருள் மெய்ப்பொருள்காண்பதறிவு) என்னும் பழமொழியுணர்ந்த பக்குவத்தோரெல்லாம் ஒவ்வொன்றிலும் உண்மையிருக்குமெனவே நிலைப்படுத்து வார்கள்—எ-று. சச

தெரிவதற்கு பொருளொன்றும் மறைப்பில்லாமல்
தீபத்தின் ஒளிபோலே தேசத்தோற்கு
சிறுமணவூர் முனிசாமி செய்தபின்னூல்
சிதம்பரவேள் சுதந்தரமாய் சேகரித்து
அறுமறையின் சிரோன்மணியா மெந்திரத்தில்
ஆதித்தன் போலங்கக் குறிகண்டோர்கள்
திருவருளின் செயல்பெற்று குணமும்பெற்று
தீர்க்காயி சாயென்றும் திகழ்வார்தானே.

(இ-ள்.) தீபப்பிரகாசம்போல் வெற்றியநடையாய் சிறுமணவூர்முனிசாமிமுதலியாரால் யெழுதப்பட்ட இன்னூலை சகலசுதந்தரத்துடன் பி-நா-சிதம்பரமுதலியார் பென்பவர் பெற்றுக்கொண்டு தமது சிரோன்மணி விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பித்து சூரியனைப்போல் சகலவுலகமும் அரியும்படியாய் வெளியிட்டார் இன்னூலின் கருத்துணரபவர்களும் அப்படியே சந்திரசூரியர்போல் தீர்க்காயுசாய் வாழ்ந்திருப்பார்—எ-று. சரு

அங்கக்குறிசாஸ்திரம்

முற்றிற்று.

